**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**

ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 75/2023**

**வழக்கின் சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : | 1 மற்றும் 2 எதிரிகள் 17/07/2022 ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டு, இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.1611/2022 ல் 21/07/2022 ம் தேதியிட்ட உத்தரவின் படி 25/07/2022 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளனர்.<br>3 வது எதிரி கைது இல்லை.<br>3 வது எதிரி தஞ்சாவூர் மாண்பமை முதன்மை மாவட்ட அமர்வு இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.4062/2022 ல் 16/08/2022 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன் பிணை பெற்று, 17/08/2022 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 16/05/2023 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 07/08/2023 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | 1. எதிரி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் பிரிவு 359BNSS-ன் படி CMP.No.39/2026 ல் தாக்கல் செய்யப்பட்ட சமாதான மனு 25/02/2026 ம் தேதி தள்ளுபடி. செய்யப்பட்டுள்ளது.<br>2. அரசுத் தரப்பில் கு.ப.ம.எண். 40/2026 ல் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு 04/03/2026 ம் தேதி அனுமதிக்கப்பட்டது. |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.13 17:29:29 +0530

| | | | |
|---|---|---|---|
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1- 10/02/2026 / இல்லை<br>அ.சா.2- 10/02/2026 / இல்லை<br>அ.சா.3 04/03/2026 / 04/03/2026 |
| 6. | கு.வி.மு.ச பிரிவு 313(1)ஆ குவிமுச கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 06/03/2026 |
| 7. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள்: | | இல்லை |
| 8. | தலைமறைவுஎதிரிகள்பற்றியவிவரம் | : | இல்லை |
| 9. | மேல்முறையீட்டுநீதிமன்றத்தால்பிறப்பிக்கபட்ட இடைக்காலதடைஉத்தரவுபற்றியவிவரங்கள் | : | இல்லை |

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.13 17:29:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்

முன்னிலை : **திருமதி. P. ரெங்கேஸ்வரி B.Sc., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.I. கும்பகோணம். மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர் (மு.கூ.பொ),

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாள் வெள்ளிக் கிழமை**

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் மாசி- 29 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 75/2023**

**(CNR.No. TNTJ 270005022023)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி.எண்.75/2023 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர்<br>மற்றும் குற்ற எண் | பந்தநல்லூர் காவல் நிலையம்<br>குற்ற எண். 480/2022 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்<br>பந்தநல்லூர் காவல் நிலையம் |
| 4 | எதிரிகளின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | 1. செல்வகுமார் (எ) மல்லி, வயது 40/2022,<br>த/பெ. கலியமூர்த்தி,<br>கீழத்தெரு, விளந்தொட்டி, திருவிடைமருதூர் தாலுக்கா.<br>2. முத்துசுப்பிரமணியன், வயது 24/2022,<br>த/பெ. வேலுசாமி,<br>அண்ணாநகர், பந்தநல்லூர்.<br>3. சந்திரகலா, வயது 35/2022,<br>க/பெ. செல்வகுமார் (எ) மல்லி,<br>கீழத்தெரு, விளந்தொட்டி, திருவிடைமருதூர் தாலுக்கா. |
| 5 | தேதி நாள்<br>சம்பவம் | 17/07/2022 |
| 6 | முறையீடு | 17/07/2022 |
| 7 | கைது | 1 மற்றும் 2 எதிரிகள் 17/07/2022 ம் தேதி கைது.<br>3 வது எதிரி கைது இல்லை. |
| 8 | பிணையில் விடுவித்தல் | 1 மற்றும் 2 எதிரிகள் இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.1611/2022 ல் 21/07/2022 ம் தேதியிட்ட உத்தரவின் படி 25/07/2022 ம் |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.13 17:29:46 +0530

| | | |
|---|---|---|
| | | தேதியன்று பிணையில் சென்றுள்ளனர். 3 வது எதிரி தஞ்சாவூர் மாண்பமை முதன்மை மாவட்ட அமர்வு இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.4062/2022 ல் 16/08/2022 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன் பிணை பெற்று, 17/08/2022 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார். |
| 9 | விசாரணை துவக்கம் | 10/02/2026 |
| 10 | விசாரணை முடிவு | 06/03/2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, இவ்வழக்கில் 1 வது எதிரி பிரிவுகள் 294(பி), 323, 506(i) இதசவின் கீழும், 2 வது எதிரி பிரிவுகள் 323, 506(i) இதசவின் கீழும், 3 வது எதிரி பிரிவுகள் 294(பி), 506(i) இதசவின் கீழும், குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

இவ்வழக்கானது 19/05/2023 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 06/03/2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்,B.Sc.,B.L.,MBA.,** அவர்களும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.**N.**செல்வகுமார்**,B.A.,B.L.,, அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.13 17:29:53 +0530

**தீர்ப்புரை**

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

கடந்த 17/07/2022ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் விளந்தொட்டி, கீழத்தெருவில், பட்டியல் சாட்சி-1 சிலம்பரசன் என்பவர் அவர் வீட்டு வாசலில் நின்றுக் கொண்டு, 1வது எதிரியை பார்த்து போலிஸ் வந்து உங்களை விசாரித்தால், ஏன் என் மனைவியிடம் பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதற்காக, 1 வது எதிரி பட்டியல் சாட்சி-1இடம் "உன் பொண்டாட்டியை அடக்கி வச்சிக்கடா குச்சிகாரி மவனே", என ஆபாசமாக பேசி கையால் அடித்து கீழே தள்ளி பட்டியல் சாட்சி-1க்கு சாதாரண காயம் ஏற்படுத்தியும், 1வது எதிரியின் மைத்துனர் 2வது எதிரி பட்டியல் சாட்சி-1ஐ காலால் உதைத்து சாதாரண காயம் ஏற்படுத்தியும், 1வது எதிரியின் மனைவி 3 வது எதிரியும் பட்டியல் சாட்சி-1 பார்த்து "இந்த தேவடியா மகனை சும்மா விடாதிங்கனு", ஆபாசமாக திட்டியும், 1 முதல் 3 எதிரிகள் பட்டியல் சாட்சி-1ஐ பார்த்து எங்களிடம் வைத்துக் கொண்டால் உன்னை கொன்றுவிடுவோம் என கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளனர். எனவே 1வது எதிரி பிரிவுகள் 294(பி), 323, 506(i) இதசவின் கீழும், 2வது எதிரி பிரிவுகள் 323, 506(i) இதசவின் கீழும், 3 வது எதிரி பிரிவுகள் 294(பி), 506(i) இதசவின் கீழும், பந்தநல்லூர் காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 230-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.13 17:30:00 +0530

**4. குற்றச்சாட்டு:-**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார்கள் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், 1வது எதிரி பிரிவுகள் 294(பி), 323, 506(i) இதசவின் கீழும், 2 வது எதிரி பிரிவுகள் 323, 506(i) இதசவின் கீழும், 3 வது எதிரி பிரிவுகள் 294(பி), 506(i) இதசவின் கீழும், குற்றச்சாட்டு வனைந்து எதிரிகளுக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 7 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6. எதிரிகள் மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் பிரிவு 359BNSS-ன் படி CMP.No.39/2026 ல் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்திய தண்டனை சட்டப்பிரிவு 294(b)-ன் படியான குற்றம் சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றம் என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**7. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 சிலம்பரசன் கடந்த 17/07/2022 ம் தேதியன்று

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.13 17:30:05 +0530

பந்தநல்லூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி-7 சுப்ரமணியன் என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனுவைப் பெற்று திருவிடைமருதூர் நிலைய குற்ற எண்.480/2022 ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(i) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.2 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அன்றைய தினமே காலை 12.30 மணிக்கு சம்பவயிடம் சென்று பட்டியல் சாட்சி-4 இளங்கோவன் மற்றும் பட்டியல் சாட்சி-5 சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு வம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 மனோபாபு விசாரிக்கப்பட்டுள்ளார். வழக்கு சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால், எதிரிகளை தேடி வந்த நிலையில், 1 மற்றும் 2 எதிரிகள் பந்தநல்லூர் ஐங்கரன் டீக்கடை அருகே நின்று கொண்டிருந்தவர்களை குற்ற காரணம் கூறி மாலை 04.00 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 3 வது எதிரி மாண்புமிகு தஞ்சாவூர் மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.4062/2022-ல் ஏற்பட்டுள்ள உத்தரவின்படி முன்பிணை பெற்று சமூக நீதிமன்றத்தில் சரணடைந்து உரிய பிணையில் வெளிவந்தது தெரிய வந்ததால் அவரை இவ்வழக்கில் கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு ஆஜர் எதிரிகளுக்கு எதிராக 30/08/2022 ம் தேதி சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(i) கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். அ.சா.3 காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ரமேஷ் வழக்கு கோப்பினை பார்வையிட்டு வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியமளித்துள்ளார்.

8. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.13 17:30:12 +0530

9. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார் எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**10. விவாதம்**:-

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**11. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**:-

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரிகள் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

12. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

13. அரசு தரப்பில் கடந்த 17/07/2022 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.13 17:30:18 +0530

விளந்தொட்டி, கீழத்தெருவில், அ.சா.1 சிலம்பரசன் என்பவர் அவர் வீட்டு வாசலில் நின்றுக் கொண்டு, 1வது எதிரியை பார்த்து போலிஸ் வந்து உங்களை விசாரித்தால், ஏன் என் மனைவியிடம் பிரச்சனை கெய்கிறீர்கள் என்று கேட்டதற்காக 1 வது எதிரி அ.சா.1 னிடம் அசிங்கமாக பேசியதாகவும், கையால் அடித்து கீழே தள்ளி அ.சா.1க்கு சாதாரண காயம் ஏற்படுத்தியதாகவும், 1வது எதிரியின் மைத்துனர் 2வது எதிரி அ.சா.1ஐ காலால் உதைத்து சாதாரண காயம் ஏற்படுத்தியதாகவும்,1வது எதிரியின் மனைவி 3 வது எதிரி அ.சா.1ஐ பார்த்து அசிங்கமாக திட்டியதாகவும், 1 முதல் 3 எதிரிகள் அ.சா.1ஐ பார்த்து எங்களிடம் வைத்துக் கொண்டால் உன்னை கொன்றுவிடுவோம் என கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

14. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 சிலம்பரசன் கடந்த 17/07/2022ம் தேதியன்று பந்தநல்லூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி-7 சுப்ரமணியன் என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனுவைப் பெற்று திருவிடைமருதூர் நிலைய குற்ற எண்.480/2022ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(i) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேற்படி கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார் மனு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. வழக்கு சம்பவம் குறித்து புகார் மனு அளித்துள்ள சிலம்பரசன் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், தனது தெருவைச் சேர்ந்தவர்கள் என்றும், சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், 2022ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் தான் தன்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.13 17:30:23 +0530

வீட்டு வாசலுக்கு முன்பு நின்று கொண்டிருந்தபோது யாரோ தன்னை சத்தம் போட்டுக் கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள் என்றும், அதில் தான் கீழே விழுந்துவிட்டதாகவும், தன்னை பின்னால் இருந்து தள்ளியதாலும், தான் எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டதால் யார் தள்ளினார்கள், எதற்கு தள்ளினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், அது சம்மந்தமாக தான் பந்தநல்லூர் காவல் நிலையம் சென்றதாகவும், அங்கு போலிசார் எழுதி வைத்திருந்த பேப்பரில் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டதாகவும், வழக்கு சம்மந்தமக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 மனோபாபு விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அனைவரும் தன் தெருவைச் சேர்ந்தவர்கள் என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.13 17:30:29 +0530

17. அ.சா.3 ரமேஷ், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது பந்தநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் சுப்ரமணியன் என்பவர் பணி ஓய்வில் சென்றுவிட்டார் என்றும், மேற்படி உதவி ஆய்வாளர் சுப்ரமணியன் என்பவருடைய கையெழுத்து மற்றும் கையொப்பம், தனக்கு நன்கு பரிட்சயம். இவ்வழக்கு கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிப்பதாகவும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி 17/07/2022 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது விளந்தொட்டி கீழ தெருவில் வசிக்கும் முருகையன் மகன் சிலம்பரசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அன்றையதினம் காலை 11.00 மணிக்கு பந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 480/2022 ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(i) இதச -வின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் அன்றைய தினமே காலை 12.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் இளங்கோவன் மற்றும் சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கில் சம்பவயிட சாட்சிகளான மனோபாபு, அஜித்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில், 1 மற்றும் 2 எதிரிகள் பந்தநல்லூர் ஐங்கரன் டீக்கடை அருகே நின்று கொண்டிருந்தவர்களை குற்ற காரணம் கூறி 16.00 மணிக்கு கைது செய்து நீதிமன்ற

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.13 17:30:34 +0530

காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், 3 வது எதிரி மாண்புமிகு தஞ்சாவூர் மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.4062/2022 ல் ஏற்பட்டுள்ள உத்தரவின் படி முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரணடைந்து உரிய பிணையில் வெளிவந்தது தெரிய வந்ததால் அவரை இவ்வழக்கில் கைது செய்யவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு ஆஜர் எதிரிகளுக்கு எதிராக 30.08.2022 ம் தேதி சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(i) இதச-வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

18. வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 புகார்தாரர் சிலம்பரசன் என்பவர் விசாரணையின் போது அரசுத்தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல், பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அ.சா.1 ம், எதிரிகளும் சமாதானம் செய்து கொண்டு, அ.சா.1 இந்நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டது, அது இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே அ.சா.1-ன் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் அ.சா.1 அரசுத்தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது. எனவே இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.13 17:30:40 +0530

**19. முடிவாக, இவ்வழக்கில் 1வது எதிரி பிரிவுகள் 294(பி), 323, 506(i) இதசவின் கீழும், 2 வது எதிரி பிரிவுகள் 323, 506(i) இதசவின் கீழும், 3 வது எதிரி பிரிவுகள் 294(பி), 506(i) இதசவின் கீழும், குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

20. வழக்கு சொத்து ஏதும் இல்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 13/03/2026-ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.13 17:30:46 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

**அரசுத்தரப்பு சாட்சிகள்;**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. சிலம்பரசன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. மனோபாபு (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு. ரமேஷ் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்;**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 17/07/2022 | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து மட்டும் |
| அ.சா.ஆ.2 | 17/07/2022 | முதல் தகவல் அறிக்கை |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.13 17:30:52 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 17/07/2022 | புகார் மனு |
| அ.சா.ஆ.4 | 17/07/2022 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 17/07/2022 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்**; இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்**; இல்லை

**குறிப்பு:**

1. 1 மற்றும் 2 எதிரிகள் 17/07/2022ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டு, இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.1611/2022 ல் 21/07/2022ம் தேதியிட்ட உத்தரவின் படி 25/07/2022ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளனர். 3 வது எதிரி கைது இல்லை. 3 வது எதிரி தஞ்சாவூர் மாண்பமை முதன்மை மாவட்ட அமர்வு இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.4062/2022 ல் 16/08/2022ம் தேதியிட்ட உத்தரவின் படி முன் பிணை பெற்று, 17/08/2022ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்.
2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை.
5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் தஞ்சாவூர் (இருப்பு) கும்பகோணம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.13 17:30:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)